முருகப்பெருமான் துணை

**மகான் கௌசிகர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.01.2024, சனிக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கனே
ஆறுமுகனார் சூட்சும வடிவான
அவதாரமே ஞான தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலை திங்கள்
குறைவிலா முன்னான்கோர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 13 ம் நாள், 27.01.2024, சனிக்கிழமை)
தெரிவிக்க துல்லிய ஆசி தனை
தேசிகன் கேட்க கௌசிகர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் வழிமுறை
ஞானம் தரும் தயவு நெறியாக
நன்னெறியாக உலகினில் இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
இனிதே அரங்கனை தேடிவந்து
கருத்தாக ஞான தீட்சை ஏற்று
கந்தப் பெருமானை வணங்கிவர
5. வருகவே ஞானவான்களாகவே
வருமுலகில் தேற்றம் கண்டு
முருகப்பெருமான் ஆசிபலத்துடன்
முழுமை ஞானம் கண்டு சிறப்பர்
6. சிறப்பான அரங்கஞானி ஆசி
சித்திகளும் இனிபிறவா பேறும்
அறத்தின் வழி உலகோர் அடைவர்
அரங்கன் ஆசி பலத்தின் வழி
7. வழிதனில் கலியுகமக்களெல்லாம்
வள்ளலார் ஆசிதனை அடைந்து
தெளிவுதிடம் அழியாமை பெறுவர்
தேசிகனால் ஞானிகள் ஆவர்

8. ஆவரே கலி இன்னலை விரட்டி
ஆளுமையை சரிசெய்யும்படி
அவனியில் ஞானவான்களாகவே
அமைத்திடும் ஞானசபை படைத்து

9. படைத்துமே பாதுகாப்புமிக்க
பண்புடன் வழி நடத்துகின்ற
படைகளாய் அரங்கர் ஆசிபட
பாரினில் ஞானத்தலைமைதனை

10. தலைமைதனை உருவாக்கியே
தவராஜன் அவதார நோக்க
உலகமாற்றம் தனை நடத்துவர்
உண்மை நன்மை நிறைந்த

11. நிறைந்த ஞானசித்தர் காலமதை
நிலவுலகம் கண்டடையச் செய்து
அருந்தவசியின் ஞான ஆட்சி படைப்பர்
அருளிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–